**தலைப்பு 153 – காணிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 153 – காணிகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,482.43 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 2,292.72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சிற்கு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 1,189.71 மில்லியன் அல்லது 34.16 சதவீதம் சேமிப்பாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 307.11 | 290.84 | 16.27 | 5.30 |
| மூலதனம் | 3,175.32 | 2,001.88 | 1,173.44 | 36.96 |
| மொத்தம் | 3,482.43 | 2,292.72 | 1,189.71 | 34.16 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 15301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.00 | 15.51 | 6.00 | 8.21 | 50.00 | 38.26 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0383/0016/000 ஆம் இலக்க கட்டு நிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 7.85 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 6000/0000/00/0015/0064/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.47 மில்லியனாகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

காணி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கும் இணக்க கூற்றும் மேலே பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டு கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவு விடயத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2.00 மில்லியன் நிதி ஏற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாது முழுமையாக அந்நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவு விடயங்களுக்காக அதிக ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 27 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

15301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்ககூற்றுக்களின் பிரகாரம் அத்தியதியில் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 395,308 கூட்டுமொத்தமாக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகள் 02 ஆண்டுகளிலிருந்து 11 ஆண்டுகள் வரையான கால வீச்சுடையதாகக் காணப்பட்டு வந்த போதிலும் அவற்றை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 02 வாகனங்கள் 02 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் வரையான கால வீச்சிலும் அமைச்சிற்குச் சொந்தமான ஒரு மோட்டார் சைக்கிள் ஒரு ஆண்டு காலமாகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்தல்

அமைச்சின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி உரிய நிறுவனங்களிலிருந்து ரூபா 135,057,176 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்சொத்துக்கள் இருக்கின்றமையை உறுதிப்படுத்துவதற்காக அவை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சிற்கு சொந்தமான 39 வாகனங்கள் 02 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால விச்சில் 04 திணைக்களங்களால் பயன்படுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை இவ்வாகனங்களை முறைப்படியாக அத்திணைக்களங்களுக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திர்த்துவைக்கப்படாது ஒரு ஆண்டுக்கு குறைந்த காலமாகக் காணப்பட்டு வரும் பொறுப்புக்கள் ரூபா 72,856,513 ஆகும். அப்பொறுப்புக்களில் நிதிப் பிரமாணம் 94 இற்கு முரணாக 06 செலவு விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பினை மிகைத்து ரூபா 410,473 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 3.5 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல் முனனேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அது தொடர்பான அவதானிப்புக்களில் சில பின்வருமாறாகும்.

(i) காணித் தகவல்கள் முறைமையைத் தேற்றுவிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் நிதிச் செயலாற்றல் 99 சதவீதமாக இருந்தும் பௌதீகச் செயலாற்றல் 50 சதவீதம் மாத்திரமாகக் காணப்பட்டது.

(ii) இடர் முகாமைத்தவத்திற்காக இலக்கமிடப்பட்ட காணிப் படிவம் ஒன்றைத் தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 02 மில்லியன் நிதி எற்பாடு உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) காணி வங்கியைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 500 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 195 மில்லியன் கட்டு நிதியும் விடுவிக்கப்பட்டிருந்தது எனினும், அவ்வாறு விடுவிக்கப்பட்ட கட்டுநிதியிலிருந்து 55.5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காணி வங்கியைத் தேற்றுவிக்கும் செயற்திட்டம்

இச்செயற்திட்டம் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) காணி வங்கியைத் தேற்றுவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 22 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் தாள்களை ஸ்கேன் செய்து கணனிமயப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தது. 09 மாவட்டங்கள் தொடர்பாக 09 அலுவலகங்கள் மாத்திரம் அச்செயற்பாடுகளை அமுல்படுத்தியிருந்தும் அதன் செயல் முன்னேற்றம் 41 சதவீதம் மாத்திரம் இருந்தது.

(ii) காணி ஆவணங்களை ஸ்கேன் செய்து கணனிமயப்படுத்தும் ஒப்பந்தம் ரூபா 56.69 மில்லியன் தொகைக்கு ஒரு தானியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டிற்காக 2016 யூலை 07 அந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஆகஸ்ட் 21 ஆந் திகதி செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கும் 2016 செப்தெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இச்செயற்பாட்டை உரிய காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் முதலாவது கால நீடிப்பு 2017 சனவரி 31 ஆந் திகதி வரையும் இரண்டாவது கால நீடிப்பு 2017 யூன் 30 ஆந் திகதி வரையுமாக இருந்தது.

(iii) ஸ்கேன் செய்வதற்குரிய உரிய தரவுகளை உட்படுத்தும் ஒரு மென்பொருளை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையால் தயாரிக்கப்பட்டிருந்தது. மென்பொருளை செயற்படுத்தும் போது அதன் இயளலவு போதியளவில் இல்லாததன் காரணமாக தரவுகளை உட்படுத்த முடியாதிருந்ததாகவும் முறைமையில் காணப்பட்ட விரைவு இல்லாத தன்மை காரணமாக தரவுகளை உட்படுத்துதல் சில சந்தர்ப்பங்களில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் உரிய தனியார் நிறுவனத்தினால் அறிக்கையிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க உடன்படிக்கை செய்துகொண்ட காலத்துக்குள் செயற்பாட்டை நிறைவேற்ற முடியாமைக்கு காரணமாக முறைமை விரைவு அற்றதாக இருந்தமை. விரைவற்றமைக்கு காரணமாக 30 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான தரவுகளை உட்படுத்துவோர் முறைமைக்குள் ஒரே தடவையில் பிரவேசித்தல், இரவு பகல் இரண்டிலும் தரவுகளை உட்படுத்துதல், இலங்கை தகவல் தொழில்நுட்ப தகவல் முகவராண்மையால் (ICTA) காணித் தரவு முகாமைத்துவத்திற்கு உரிய மாற்றங்கள் மேற்கொண்டிருக்காமை ஆகிய காரணங்கள் காட்டப்பட்டிருந்தன. இதற்கிணங்க இத்தாமதத்திற்கு உரிய முகவராண்மையின் பங்களிப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துதல்

---

கற்ற பாடங்கள் நல்லிணக்க மற்றும் ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 24 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 26 மில்லியன் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடக்கு கிழக்கு காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நில அளவையாளர் திணைக்களத்திற்கு ரூபா 20 மில்லியன் தொகை மற்றும் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு ரூபா 10 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக செலவு அறிக்கையோ அல்லது உறுதிப்படுத்துவதற்கான அறிக்கையோ அல்லது ஆவணங்கள் எதுவுமோ அமைச்சிடம் காணப்படவில்லை.

(ii) காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 5 மில்லியன் தலைமை அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டு மிகுதி ரூபா 5 மில்லியன் மாகாண காணி ஆணையாளர் அலுவலகம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. தலைமை அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 5 மில்லியனில் ரூபா 853,181 அளவில் செலவு செய்யப்பட்டு ரூபா 4,146,819 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. செலவு செய்யப்பட்ட பணத்தில் வடக்கு

கிழக்கு பிரச்சினை சம்பந்தமான கடிதங்களை சிங்கள மொழிக்கு மொழி பெயர்ப்பதற்கான கட்டணமாக அதிக செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) காணிச் சுவீகரிப்பு பிரிவின் செயலாற்றல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குள் அமுல்படுத்தப்பட்ட காணிச் சுவீகரிப்பு கோவைகளின் எண்ணிக்கை 18841 ஆக இருந்ததுடன் இவற்றில் இழப்பீடு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 236 மாத்திரமாக இருந்தது. மேலும் கைவிடப்பட்டு செயற்பாடற்ற கோவைகளின் எண்ணிக்கை 401 ஆக இருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 1950 இன் 9 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38 (அ) பிரிவின் பிரகாரம் உப கட்டளைகள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 1168 ஆக இருந்ததடன் இழப்பீடு செலுத்தி வேலை பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 236 ஆக இருந்தது.

(iii) 1950 இன் 9 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 38 (அ) பிரிவின் பிரகாரம் உப கட்டளைகளின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகள் சம்பந்தமாக விரைவாக இழப்பீட்டு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிக வட்டியைச் செலுத்தவேண்டியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது காணிச் சுவீகரிப்பு இழப்பீடாக ரூபா 697,586,929 செலத்தப்படும் போது 55 கோவைகளுக்கான வட்டியாக ரூபா 160,002,470 தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டது. இவ்வாறு செலுத்தப்பட்ட வட்டிப் பணம் சம்பந்தமாக காணி சுவீகரிக்கப்பட்ட ஆண்டுகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| காணி சுவீகரிக்கப்பட்ட காலப்பகுதி | செலுத்தப்பட்ட வட்டி |
|---|---|
| | ரூபா |
| 1976-1995 | 48,673,478 |
| 1996-2005 | 71,379,957 |
| 2006-2014 | 39,949,035 |
| மொத்தம் | 160,002,470 |

(உ) திட்டமிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க தொடர்புபட்ட செயற்திட்டங்களின் நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றத்தைப் பரீட்ச்சித்த போது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் தரவுகளின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்தக்கட்டிருக்கவில்லை. அதற்கிணங்க

வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கையை அடைந்து கொள்வதற்கு அமைச்சிற்கும் முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | நிதி ஏற்பாடு | செலவு | இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | நில அளவை செய்யப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை | சிபார்சு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | வர்த்த மானியில் வெளியிடப்பட்ட தீர்மானங்களை பிரசித்தப் படுத்துதலின் எண்ணிக்கை | தனிப்பட்ட வர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | | | | |
| 2013 | 800 | 668.0 | 135,000 | 110,630 | 71,315 | 58,690 | 28,402 |
| 2014 | 400 | 445.0 | 122,090 | 122,239 | 53,448 | 66,759 | 24,242 |
| 2015 | 546 | 413.0 | 206,580 | 83,957 | 51,475 | 53,484 | 29,043 |
| 2016 | 500 | 362.6 | 45,000 (திருத்தியது) | 133,727 | 60,830 | 59,880 | 21,872 |

பிம்சவிய நிபழ்ச்சித்திட்டத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்றம் தொடர்பாக நடாத்தப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டில் வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் அளவு 100,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நில அளவையாளர் திணைக்களத்தால் காலத்துக் காலம் மேற்கொண்ட திருத்தத்தின் படி 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது இந்த இலக்கு 45,000 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் 06 மாத காலம் கடந்த பின்னர் உரிமைச் சான்றிதழை வழங்க வேண்டிய அளவின் இலக்கிடப்பட்ட அளவு 40,000 ஆக திருத்தம் செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் இந்த இலக்கிடப்பட்ட சான்றிதழ்களின் அளவில் 35,031 சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

- பதிவுசெய்யப்பட்ட அளவினை 35,031 இல் தனிப்பட்டவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் அளவு 21,872 மாத்திரமாக இருந்தது. அது பதிவு செய்யப்பட்ட உரிமைச் சானிறிதழ்களின் அளவில் 62 சதவீதமாக இருந்தது.

(ii) காணிகளைச் சுவீகரித்தல்

காணிச் சுவிகரிப்பு பிரிவு 2016 ஆம் ஆண்டின் போது பௌதீக ரீதியாக 244 காணிகளைச் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 134 காணிகள்

அல்லது சுவீகரிப்பதற்கு எதிர்பாக்கப்பட்ட காணிகளின் அளவில் 55 சதவீதம் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

(iii) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- 20,000 காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக ''பிரதேச பிரிவுத் தினம்'' நடாத்தப்படுவதற்கும் 1000 பிரச்சினைகளைத் தீர்ததுவைப்பதற்காக நடமாடும் சேவைகளை நடாத்தவதற்கும் 15,000 காணி ஆவணங்களை வழங்குவதற்காக காணிக் கச்சேரிகளை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 48 சதவீதம், 47 சதவீதம் மற்றும் 99 சதவீதமாக இருந்தன.

- 80 பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் பதவியணியிலுள்ள 400 உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரச் சட்டத்தை திருத்துதல்

காணித்துறைக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கட்டளைச் சட்டங்களை நாளதுவரையாக்கி பேணவேண்டிய தேவைப்பாடு காணப்படுவதுடன் அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காணிகள் அபிவிருத்தி கட்டளைச் சட்டம்

கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான வரைவு அதிகாரச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வரைவு அதிகாரச் சட்டத்திற்கான திருத்தங்கள் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சட்டமா அதிபர் மேற்கொண்ட திருத்தங்களை உள்ளடக்கிய வரைவு 2015 பெப்ரவரி 26 ஆந் திகதிய சட்ட வரைபுனரினால் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அவதானிப்புக்களுக்காக காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அதற்கான புதிய திருத்தம் 2016 ஒக்தோபர் 18 ஆம் திகதி சட்ட வரைஞருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது இதன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 மே 31 ஆற் திகதி வரை 08 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii)காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டம்

1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்ட திருத்தத்திற்காக 2002 ஆம் ஆண்டிலிருந்து கலந்துரையாடப் பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டின் போது அரமச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தை திருத்தும் பிரேரணைக்கான

அமைச்சரவைப் பத்திரத்தின் வரைபு ஒன்றை தயாரிப்பதற்காக அற்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க சட்டமா அதிபரினால் திருத்தங்களை உள்ளடக்கும் தொடக்க வரைபு சட்ட வரைபுனர் திணைக்களத்தால் 2006 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்ட வரைபு 2008 அம் அண்டின் போது அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 2016 பெப்ரவரி மாதத்தின் போது புதிய ஒரு திருத்தம் சம்பந்தமாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2016 யூன் மாதத்தின் போது அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்காக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவைப் பத்திரமானது நிதி அமைச்சரின் அவதானிப்புகளுடன் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைத் தெரிவுக்குழுவின் சிபார்சினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டு காலத்தினுள் காணிசுவீகரிப்பு அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 முகாமைத்துவ பலவினங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) அரசாங்கத்தின் பல்வேறு செயற்திட்டங்களுக்காக காணிகளைச் சுவீகரித்தல்

அரசாங்கத்தின் பல்வேறு செயற்திட்டங்களுக்காக காணிகளைச் சுவீகரிக்கும் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கராபிடிய மோதர புதிய மகளிர் வைத்தியசாலைக்காக 0.742 ஹெக்டயர் காணிகளைச் சுவீகரிப்பதற்காக ரூபா 74,367,500 தொகையான இழப்பீடும் ரூபா 32,655,750 தொகையான வட்டியும் அது தொடர்பாகச் செலுத்தப்பட்டிருந்தன. அக்காணிக்காக 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 38 (அ) பிரிவின் பிரகாரம் உப விதிகளைப் பிரசித்தப்படுத்தி 2008 சனவரி 10 ஆந் திகதி உரித்து பெறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் இழப்பீடு செலுத்துவதற்கு 06 ஆண்டுகள் காலம் எடுத்திருந்தது. நிலஅளவை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு நிலஅளவைப் படங்களை அனுப்புவதற்கு 21/2 ஆண்டுகள் காலம் எடுத்திருந்ததன் காரணமாக இழப்பீடு செலுத்துதல் தாமதமடைந்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. அவ்வாறே உரிமை பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் 1950 இன் 9 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்தலை வர்த்தமானியில் வெளியிட்டு பகிரங்கப்படுத்துவதற்கு 10 மாதங்கள் அளவிலான காலதாமதம் எடுத்திருந்தது. இத்தாமதமடைதலை தவிர்த்துக் கொள்வது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வேருஸ்சாகவை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் அத்திடிய பெல்லன்தர பகுதியில் மழை நீரை தற்காலிகமாக சேசரித்து வைக்கும் நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற்காக காணிகளை சுவீகரிப்பதற்கு ரூபா 139,500,000 இழப்பீடும் அதற்காக ரூபா 21,264,514 வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக 2013 ஒக்தோபர் 04 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட அறிவித்தலை வர்த்தமானியில் செளியிட்டு காணிகளைச் சுவீகரிக்கும் உத்தியோகத்தர்களால் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு அந்த அறிக்கைகளை அனுப்பி காட்சிப்படுத்துவதற்கு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டடிருந்தது. இக்காணியின் ஆரம்ப நில வரைபடமும் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி கிடைத்திருந்தும் காணிச்

சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் அந்த அறிவித்தலை வெளியிட்டு உரிமையாண்மைப் பரிசோதனையை நடாத்தி விரைவாக இழப்பீட்டினைச் செலுத்த வேண்டிய போதிலும் அதற்காக ஒரு ஆண்டுகாலம் தாமதமடைந்திருந்தது. இதற்கிணங்க இழப்பீட்டினைச் செலுத்துவதற்கான கூட்டு மொத்த தாமதம் 02 ஆண்டு 02 மாதங்களாக இருந்தது.

(iii) நுவரெலியா ஜனாதிபதி மாளிகைக்கு அருகாமையிலுள்ள புனித டிரைவ் வீதியில் அமைந்துள்ள ஒரு ஏக்கர் அளவிலா கட்டிடத்தையும் காணியையும் சுவீகரிப்பதற்காக ரூபா 98,000,000 இழப்பீட்டும் ரூபா 42,013,584 இழப்பீட்டிற்கான வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது. காணியின் உரிமையை பொறுப்பேற்று இழப்பீட்டினை செலுத்துவதற்கு 06 ஆண்டுகள் காலம் கடந்திருந்ததுடன் காணிக்கான உரித்துப் பரிசோதனையை நடாத்துவதற்கு 02 ஆண்டுகள் 05 மாதங்கள் அளவான தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iv) கரந்தெனிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய கல்கந்த தோட்டத்தில் 1 ஏக்கர் 28 பேர்ச்சஸ் காணிக்காக ரூபா 5,650,000 இழப்பீடும் ரூபா 3,210,593 பெறுமதியான வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது இக்காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப விதிகள் 2007 நவம்பர் 19 ஆம் திகதி வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டு காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்தல் 2008 யூன் 04 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் தெரியப்படுத்தல் 2012 யூலை 18 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அது வரை 04 ஆண்டுகள தாமதம் ஏற்பட்டிருந்தது.

(v) கொழும்பு பாரிய வெள்ளத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடலை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் கீழ் கோட்டே கால்வாயினை அபிவிருத்தி செய்வதற்காக காணிகளைச் சுவீகரிக்கும் போது 21 காணித்துண்டுகளைக் கொண்ட காணிக்காக 05 காணித் துண்டுகளைத் தவிர்த்து மிகுதியான காணித்துண்டுகளுக்காக 2003 ஆம் ஆண்டின் இறுதி அளவில் இழப்பீடு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. உரிமையாண்மையை நிர்ணயிக்க முடியாத 05 காணிகளுக்கான இழப்பீட்டு பணத்தை 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இந்த 05 காணித்துன்டுகளுக்காக 2008 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி கிடைக்காததன் அடிப்படையில் இழப்பீட்டுப் பணத்தை நீதி மன்றத்தில் வைப்புச் செய்ய முடியாதிருந்தது. மீண்டும் நிதி ஏற்பாடு 2008 ஆம் ஆண்டின் போது கோரப்பட்டிருந்தும் அத்திகதியிலிருந்து மேலும் 04 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2012 யூலை மாதத்தின் போது நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வது தாமதித்ததன் காரணமாக ரூபா 3,147,600 இற்கு அதிகமான பணம் வட்டியாக அரசாங்கத்தினால் மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

(vi) காணிகளைச் சுவீகரிப்பதற்கான இழப்பீட்டினையும் வட்டியையும் செலுத்தவதற்காக நிதி ஏற்பாட்டை விடுவிப்பது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- கொழும்பு பிரதேச செயலகத்தினால் கடற்படை முகாமிற்காக காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாக அமைச்சினால் ரூபா 102,000,000 நிதி ஏற்பாடு 2016 யூன் 30 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தும் 2016

திசெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 26,355,801 தொகையான கட்டுநிதி மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. மிகுதிப் பணமாகிய ரூபா 65,275,000 இதற்காக கணக்காய்வுத் திகதியான 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை நிதி ஏற்பாட்டை மீண்டும் கோரி பணத்தை விடுவித்துக்கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிதி ஏற்பாட்டை விடுவித்து 71/2 மமாதங்கள் கடந்திருந்தும் அப்பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இக்காலப்பகுதிக்காக மாத்திரம் ரூபா 2,855,781 தொகையான வட்டியை செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அமைச்சினால் ஒவ்வொரு விடயத்திற்கும் விடுவிக்கப்பட்ட இழப்பு பணத்தை செலுத்துவது தொடர்பான விபரம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

- காணிகளைச் சுவீகரிப்பது சம்பந்தமாக நிதி ஏற்பாட்டை விடுவிக்கும் போது உரிய கோவை இலக்கத்தின் கீழ் சுவீகரிப்பு பிரிவினால் உரிய நிறுவனத்திற்கும் அமைச்சின் கணக்குப் பிரிவிற்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் செலவுகளை உரிய செலவுத் தலைப்பிற்கு வரவு வைத்தல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க உரிய கோவை இலக்கத்திற்காக விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடு முழுவதையும் பயன்படுத்துவது தொடர்பாக பரீட்சிப்பதற்கு இயலாதிருந்தது. இதற்கிணங்க அமைச்சினால் விடுவிக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டிலிருந்து எந்த நிறுவனத்தினாலும் அந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) சீதாவக்க கைத்தொழில் பேட்டைக்கு உட்செல்லும் வீதியை விரிவுபடுத்துவதற்கு காணிகளைச் சுவீகரிப்பதற்காக மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, மேல்மாகாண போக்குவரத்து பெருந்தெருக்கள், வீடமைப்பு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மூலம் கூட்டுறவு, மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு சமர்ப்பித்ததன் பின்னர் அந்த அமைச்சினால் காணி அமைச்சிற்கு விண்ணப்ப் படிவம் 1996 யூலை 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இக்காணிக்காக 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப விதி 1997 ஏப்ரல் 04 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. 2008 யூலை 01 ஆம் திகதி வரை இழப்பீடு வழங்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இக்காணிக்காக இழப்பீடு செலுத்துவதற்கு அமைச்சு நிதி ஏற்பாட்டின் மூலம் வெலவு செய்வதற்கு வரவு செலவுத்திட்ட பணிப்பாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் தாமதம் அடைந்ததன் காரணமாக 2015 யூலை மாதம் வரை அந்த இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) தாமதத்தை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு பணம் கிடைக்காமையின் காரணமாக பாராளுமன்ற முறைப்பாட்டுத் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் 2011 சனவரி 05 ஆந் திகதி வரையான 02 மாதங்களுக்குள் இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு அமைச்சு நிதி ஏற்பாட்டின் மூலம் செலவு செய்வதற்கு உத்தியோகத்தர்கள் இணங்கியிருந்தார்கள். அதற்காக 2015 ஒக்தோபர் மாதம் வரை 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே காணிக்கான உரிமைகளைப் பரீட்சிப்பதற்காக 08 ஆண்டுகள் காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ix) இழப்பிட்டினைச் செலுத்தவதற்காக நிதி ஏற்பாட்டை வழங்கும் போது எந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற சிக்கல் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது இனங்காணப்படாமையின் காரணமாக நிதி ஏற்பாட்டை வழங்கும் போது விரைவாக இடம்பெற்றிருக்காமையின் காரணமாகவும் 1950 இன் 9 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப விதிகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இழப்பீடு செலுத்திய திகதியான 2015 ஒக்தோபர் 28 ஆம் திகதி வரை வட்டியாக ரூபா 8,635,112 செலுத்தப்பட்டிருந்தது. இதற்குரிய இழப்பீடாக ரூபா 7,542,800 செலுத்த வேண்டியிருந்தது. இதற்கிணங்க இழப்பீட்டு பணத்தை விட மேலதிகமாக வட்டியை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(x) கொழும்பு பாரிய நீர் வழிந்தோடல் மற்றும் கால்வாய் புனரமைத்தல் செயற்திட்டத்திற்காக நுகேகொடை நாவல கொரொக்கஹகும்புர மற்றும் கொரக்கஹஓவிட ஆகிய காணிகளில் 10 ஏக்கர்களை சுவீகரித்தலானது இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்படவேண்டியிருந்தது. அந்த நடைமுறை 1991 மே 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக 1950 இன் 09 ஆம் இலக்க காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் உப விதியின் கீழ் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. அக்காணி சம்பந்தமாக உரிமைப் பரிசோதனைகளை நடாத்தி முழுமையாக இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தொகுதி இலக்கம் 05 இல் 386 பேர்ச்ஸ் காணித்துண்டிற்காக 24 வருடங்கள் தாமதத்தின் பின்னர் 2015 திசெம்பர் 29 ஆந் திகதி 2,128,855 இழப்பீடாகவும் அதன் வட்டியாக ரூபா 3,603,764 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது ஏனைய காணித் துண்டுகளுக்காக 2017 சனவரி 31 ஆந் திகதி வரை பணத்தைச் செலுத்துவதற்கோ அல்லது உரிமைகளைச் சமர்ப்பிக்காத காணித் துண்டுகளுக்காக உரிய இழப்பீட்டுப் பணத்தை நீதி மன்றத்தில் வைப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையை புதிய முதலீட்டாளருக்கு ஒப்படைத்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் ஆமற்கொள்ளப்படுகின்றன.

(i) காணிகள் அமைச்சிற்கு கந்தளாய் சீனித் தொழிற்காலையை ஒப்படைக்கும் சந்தர்ப்பம் வரை ரூபா 76,352,246 தொகையான நிலுவை மின்சாரப் பட்டியல் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அப்பணத்தை விரைவாகச் செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்காவிடின் சட்ட நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மின்சார சபை தெரியப்படுத்தியிருந்தும் அது சம்பந்தமாக தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

(ii) எதுவித உற்பத்தியோ அல்லது ஏனைய நடவடிக்கையோ மேற்கொள்ளாதிருந்தும் கந்தளாய் சீனிக்கைத்தொழில் நிறுவனத்தின் பிரதான அலுவலகம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தின் 02 அறைகளில் பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக மாதாந்தம் ரூபா 25,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் நிறுவன ரீதியான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் குறிப்புக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது மேலதிக வருமானம் உழைக்கும் வழியாக மணல் விற்பனை செய்தல், குளங்களை குத்தகைக்கு வழங்குதல். வீடுகளை விற்பனை செய்தல் மற்றும் ஏனைய வருமானங்களாக ரூபா 468,811 சேமிக்கப்பட்டிருந்தது. அதற்காக

முறையான நடைமுறை இனங்காணப்பட்டிருக்காததுடன் அது சம்பந்தமாக உரிய மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் 2015 ஒக்தோபர் மாதத்தின் போதும் 2015 மார்ச் மாதத்தின் போதும் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஒடுவதில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தது 2017 யூன் 30 ஆந் திகதி வரை அது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இன்னுமொரு வாகனம் 2016 மே மாதத்தின் போது நீரில் மூழ்கியிருந்ததுடன் 07 மாத தமதங்களின் பின்னர் 2017 சனவரி மாதத்தின் போது அது திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 110 (2) இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்குச் சொந்தமான 02 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் அதில் உள்ளடக்கப்படாதிருந்தும் ஒதுக்கீட்டுக் கணக்கின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 23 | 20 | 3 |
| மூன்றாம் மட்டம் | 04 | 03 | 1 |
| இரண்டாம் மட்டம் | 447 | 408 | 39 |
| ஆரம்ப மட்டம் | 52 | 47 | 5 |
| மொத்தம் | 526 | 478 | 48 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புலனாய்வு உதவி (காணி சுவீகரிப்பு)/ அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியணியில் 358 நபர்கள் உள்ளதுடன் இந்த உத்தியோகத்தர்கள் 207 பிரதேச செயலகங்களின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். இந்த உத்தியோகத்தர்களின் கடமைகளுக்குரிய செயலாற்றல் சம்பந்தமான விபரமான அறிக்கை இல்லாதிருந்தது. உத்தியோகத்தர்களின் வருடாந்த சம்பள ஏற்றக் கொடுப்பனவு, செயலாற்றல் மதிப்பீடு ஆகிய செயற்பாடுகளின் போது அமைச்சு கவனத்தில் எடுத்துக்கொள்கின்ற விடயங்கள் விளக்கமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளங்கள் மற்றும் பிரயாணச் செலவுகளாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 12,682,302 செலவு செய்யப்பட்டிருந்தது.